2007 ஏப்ரல் 10]

வழங்கப்பட வேண்டும். ஆகவே, எப்படியிருந்தாலும்கூட, எந்த வகையான .நிலத்திலே குடியிருந்தாலும், 10 ஆண்டுகள் குடியிருப்பார்களேயானால், அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள், தங்களுக்குப் பல்வேறு வேலைகள் இருப்பதாகச் சொல்லித் தட்டிக் கழிப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். நான் இந்த அவையிலேயிருந்து, அந்த அதிகாரிகளுக்கு, உங்கள் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பாக, ஆணை பிறப்பிப்பதாக அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். எந்த வேலை இருந்தாலும், முதல் வேலையாக, இந்தப் பட்டா கொடுக்கிற வேலையைத்தான் அவர்கள் கருத வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க பெரியசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

மண்ணெண்ணெய்

***5094—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதியில், சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் முறையாக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவக் கிராமங்களுக்கு நிவாரண அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு மண்ணெண்ணெய் மற்றும் நிவாரணப் பொருட்கள் அனைத்தும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 2004 ஆம் ஆண்டிலே குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, அதிலே பழைய அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் வழங்கப்பட்ட ஏனைய கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. அரிசி மட்டும்தான் வழங்கப்படுகிறது. ஆனால், அங்கேயிருக்கிற கிராம நாட்டாண்மைப் பஞ்சாயத்தார்கள், அந்த மூன்று லிட்டர் மண்ணெண்ணெயை, இரண்டு லிட்டராகக் கொடுத்து, பாக்கி ஒரு லிட்டர் உபரியை எடுத்து, ஏனைய கார்டுகளுக்கு இதுவரை வழங்கி வருகிறார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே இப்போது மின்சார விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டு, இன்னும் முழுமையாகச் சீரடையவில்லை. மேலும், தற்காலிகக் குடியிருப்புகளில் மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு மண்ணெண்ணெய் என்பது மிக, மிக அத்தியாவசியமாக இருக்கிறது. குறிப்பாக அந்தத் தொகுதியிலே, 8,754 விண்ணப்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றில் 563 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1,186 அட்டைகள்தான் இதுவரையில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த அட்டைகளுக்கு அரிசி மட்டும்தான் இதுவரை வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியசாமி, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. மு.க. பெரியசாமி: ஆனால், மண்ணெண்ணெய் இது.வரை வழங்கப்படவில்லை. ஆகவே அரசு, அந்தக் குடும்பங்களுக்கு, அவர்களின் அவசியத்தைக் கருதி மண்ணெண்ணெய் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டத்திலே, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2004 ஆம் ஆண்டிலே தற்காலிகமாக அட்டைகள் வழங்கப்பட்டன. மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, 2005 ஆம் ஆண்டிலே புதிதாக அவர்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டன. அப்படி, அந்த மாவட்டத்தைப் பொறுத்தளவிற்கு முதலில் 14,237 பேருக்குத் தற்காலிக அட்டைகளை மட்டும் வழங்கி, நிரந்தரமாக 2005-லேயிருந்து 2009 வரைக்கும், அவர்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டு, மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. ஆகவே, 2005 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரைக்கும் புதிதாக அட்டைகள் வழங்கப்படவில்லை என்று எந்தப் புகாரும் இதுவரை வரவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படி ஏதாவது புகார் இருக்குமென்று சொன்னால், அதைத் துறையினுடைய அமைச்சரிடத்திலே கொடுத்தாலும் சரி அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுத்தாலும் சரி, ஆய்வு செய்து, அவர்களுக்கு மீண்டும் புதிதாக அட்டைகள் வழங்கப்பட்டு, உரிய முறையிலே மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியரிடத்திலே நானே நேரடியாகச் சென்று; அந்த விவரங்களையெல்லாம் கொடுத்து, கோரிக்கை வைத்திருக்கிறேன். ஆனால், இதுவரை அது நிவர்த்தி செய்யப்படவில்லை. மேலும், அந்த அட்டைகள் முதலிலே, மாவட்டத் தலைநகரங்களிலேயே அச்சிடப்பட்டதாகச் சொன்னார்கள். இப்பொழுது சென்னையிலே அடிப்பதனாலே, எங்களாலே அதைச் சரியாக வழங்க முடியவில்லை; ஆகவே, பழைய முறையிலேயே, மாவட்டத் தலைநகரங்களிலேயே அச்சிட்டுக் கொடுத்தால், உடனுக்குடன் எங்களால் கொடுக்க முடியும் என்று அந்த அதிகாரிகள் சொல்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் அச்சடிப்பது என்பதும், மாநில அளவில் அச்சடிப்பது என்பதும், ஒரு கொள்கை முடிவு. இப்பொழுது மாநில அளவில்தான் அச்சடித்து, அவை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டு, ஒவ்வொரு வட்ட அளவிலே, ஒவ்வொரு கிராம அளவிலே சென்றுகொண்டிருக்கிறது. ஆனால், நான் தமிழ்நாட்டில் இருக்கிற 29 மாவட்டங்களுக்குச் சென்று தணிக்கை செய்தபோது, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் எல்லாம், இவை எல்லாம் மாவட்ட அளவிலே இருக்கலாம்; அதுதான் எங்களுக்கு முறையாக, மக்களுக்குப் பயன்படுகிறவகையில், நுகர்வோருக்கு வசதியாக இருக்கும் என்ற ஒரு குறிப்பினைத் தந்தார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். இது கொள்கை முடிவு என்கிற காரணத்தினால், முதலமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டுப் பின்னால் அவை எல்லாம் அறிவிக்கப்படும். அதே நேரத்திலே, தரங்கம்பாடி பகுதியிலே, சுனாமியால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியிலே, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் புகார் கொடுத்ததாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனுடைய நகலை என்னிடத்தில் தந்தால், முறையாக 2004-லே சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்காலிக அட்டை வழங்கப்பட்டவர்களுக்குக் கட்டாயம் அதைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வழங்கப்பட்ட கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டு, பொதுவாகத் தமிழகம் முழுவதும் இருந்துகொண்டிருக்கிறது. புதிய கார்டுகளுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து மண்ணெண்ணெய் allot செய்யவில்லை என்று கடந்த முறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். புதிதாக வழங்கப்பட்டிருக்கின்ற அந்த கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் எப்பொழுது வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தளவிற்கு நமக்கு 76,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால், இப்பொழுது மத்தியத் தொகுப்பிலிருந்து 59,852 கிலோ லிட்டர்தான் நமக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 39 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. அது குறித்துத் தொடர்ந்து மத்திய அரசுக்கு இதுவரை ஏழு முறை கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு முறை முதலமைச்சர் அவர்களே எழுதிய பிறகுதான், இரண்டு மாதத்திற்கு, மூன்று மாதத்திற்கு என்று தற்காலிகமாக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. அந்த மண்ணெண்ணெயை, புதிதாக இருக்கிற குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு முறை கொடுத்துவிட்டு, பின்னால் கொடுக்கவில்லையென்று சொன்னால், அதிலும் பிரச்சினை வரும். எனவே, ஏற்கெனவே குடும்ப அட்டை வழங்கியவர்களுக்கு விசேஷ காலங்களிலே அதாவது தீபாவளி வருகிறபொழுது, பொங்கல் வருகிறபொழுது மண்ணெண்ணெய் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தொடர்ந்து அந்த முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். வந்தவுடனேயே, மண்ணெண்ணெய் யார், யாருக்கெல்லாம் கொடுக்கப்பட வேண்டுமோ, அதைக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சியைச் செய்வோம். தொடர்ந்து மத்திய அரசை நாம் அணுகிக்கொண்டுதான் இருக்கிறோம்; முறையாக அணுகிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

வேலைவாய்ப்பு அலுவலகம்

***5967—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?